# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/57 - 2019 ඔක්තෝබර් මස 30 වැනි බදාදා - 2019.10.30

*2147/57 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.22 ஆந் திகதிய 2063/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 2A மற்றும் 3A பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளையின் அட்டவணையில் காணியின் பெயர் பதுலுகெலே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது உடஹேன எனவும், காணியின் விஸ்தீரணம் 0.0668 ஹெக்டயார் (26.41 பேர்ச்சஸ்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது 0.0763 ஹெக்டயார் (30.17 பேர்ச்சஸ்) எனவும், காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி திரு. பி. கஹதகமகே-மெதவத்தஹேன, திதலகம மத்திய, திஹகொட எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது திரு. லியன முதியன்செலாகே திலகசிரி, இலக்கம் 3 ஹேனபாவுல கெதர, கிதலகம கிழக்கு, திஹகொட எனவும், காணிக்கு உரிய எல்லைகள் நிலஅளவை திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள MR/THG/2017/462 ஆம் இலக்கமுடைய மேம்படுத்தப்பட்ட வரைபின்படி குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறு கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | துண்டு இலக்கம் A, பெஸ்டியன் கஹதகமகே உரிமை கோருகின்ற மெதவத்தஹேன மற்றும் கமல் ராமநாயக உரிமை கோருகின்ற காணி ; |
| கிழக்கு | : | கமல் ராமநாயக உரிமை கோருகின்ற காணி மற்றும் லியன முதியன்செலாகே திலகசிரி உரிமை கோருகின்ற உடஹேன ; |
| தெற்கு | : | லியன முதியன்செலாகே திலகசிரி உரிமை கோருகின்ற உடஹேன மற்றும் வீதி ; |
| மேற்கு | : | வீதி மற்றும் துண்டு இலக்கம் A. |

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2019, ஒற்றோபர் 24.*
*5/2/2/1328.*

*11-1047*


1A – G 31378 – 50 (2019/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு எஹலியகொடை புதிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு அலகிற்காக மேலதிக காணிப்பகுதியொன்றின் உரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, “லக்திய மெதுர”, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 24.
5/2/2/1521.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தின், தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் : 124சீ, கலபலன கந்த கிராம அலுவலர் பிரிவில் மாநியங்கம கிராமத்தில் அமைந்துள்ள கொபொதுராவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. A. வெலகெதர அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள வரைபட இலக்கம் 4041 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 1 ஏக்கர் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :

வடக்கு : தனியார் பிரவேச வழி ;
கிழக்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : பிரதேச சபை வீதி ;
மேற்கு : தனியார் பிரவேச வழி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : திரு. கே. ஜீ. பாலித பிரேமசிரி,
பஹல நாகொட,
ஹிரிகுபுர வீதி,
கெடஹெத்த.

11-1048

---

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஹெம்மாதகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சேகரிப்புத் தொட்டியையும் அதற்கான உட்செல்லும் பாதையையும் நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, “லக்திய மெதுர”, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 24.
5/2/2/1527.

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தின், அரணாயக பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் : 44சீ, தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராம அலுவலர் பிரிவில், தல்கஸ்பிடிய பணபுரே கிராமத்தில் அமைந்துள்ள அபதெனிய வதுயாயே பணபுரே கொடச என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 14 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். எஸ். எம். அஜ்வாட் அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள வரைபட இலக்கம் 11711 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கீழ்க்காணப்படும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :*

வடக்கு : வீதி ;
கிழக்கு : 281 ஆம் வரைபடத்தின் துண்டு இலக்கம் 38 ;
தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. சொக்மன் அவர்களின் வரைபட இலக்கம் 480 இன் துண்டு இலக்கம் 11சீ ;
மேற்கு : 281 ஆம் வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் எஞ்சியுள்ள பகுதி மற்றும் வீதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவர்களின் பெயரும் முகவரியும்* : எச். எம். அயிசா செய்லானியா,
இலக்கம் 225,
காசல் வீதி,
பொரளை,
கொழும்பு 08.

11-1049

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.